
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 9 செப்டம்பர் 2009



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்**
**எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்**
**இணைந்து நடத்தும்**

# 12 - ம் வேதாகம கருத்தரங்கம்

# TWELFTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : அக்டோபர் 2, 3 – 2009
(வெள்ளி, சனி – அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : வெள்ளி காலை 9.00 – மாலை 4.30 மணி
சனி காலை 9.00 – 12.30 மணி

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. உங்களால் என்ன செய்ய முடியும் ? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. நோய்களை அடையாளம் கண்டுகொள்வதும், எதிர்ப்பதும் .... 22
7. ஆராதனையில் கலந்து கொள்ளுவது அல்லது சபை கூடி வருவது அவ்வளவு முக்கியமானதா? .... 23
8. சுவிசேஷத்தின் வெற்றி ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 SEPTEMBER - 2009 Issue - 9

**ஆசிரியர் உரை**

## “ கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை ”

இப்பூவுலகில் வாழும் மனிதர்கள் எல்லோருக்குமே பொதுவான ஒரு குணம் உண்டு. அது, அவர்கள் ஒரு செயலைச் சரியாகவும், முறையாகவும், நியாயமாகவும் செய்வதற்கும் அல்லது சரியில்லாமலும், முறையற்றும், அநியாயமாகவும் செய்வதற்கும் அளவுகோலாக, தாங்கள் செய்யும் செயலை மற்றவர்கள் பார்க்கிறார்களா அல்லது பார்ப்பதில்லையா என்று கவனித்தும், கணக்கெடுத்தும் செயல்படுவது. இக்கூற்றுக்கு விதிவிலக்கு என்று ஒருவேளை விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் இருக்கலாம். இருப்பினும் இப்படிப்பட்ட நினைப்பு பரவலாகவே இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே மனிதர்கள், பல சமயங்களில் மற்றவர்கள் பார்வையில் படாமல் தவறான காரியங்களில் ஈடுபட்டு, தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இப்படி இழி செயலைச் செய்து விட்டு, தங்கள் மனதில் தங்களைச் சமார்த்தியசாலிகளாகவும் எண்ணிக் கொள்ளுகிறார்கள். இவர்களின் இப்படிப்பட்ட எண்ணம் தான் கொடுமை என்றால் இதைவிடக் கொடுமையும் உண்டு. அது இப்படிப்பட்டவர்களுக்கு இச்சமுதாயம் கொடுக்கும் “ கெட்டிக்காரன் ” என்ற பட்டம்.

நான் விவரிக்கும் இக்கொடுமைக் காரியங்கள், இப்பூமியில் அரங்கேறிக் கொண்டிருப்பது உண்மை தான் என்றாலும், இவைகளுக்கெல்லாம் மேலான ஒரு பேருண்மை உள்ளதென்பதை ஏனோ உலகிலுள்ள பெரும்பாலானவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. இந்தப் பெரும்பாலான சின்னத்தனக்காரர்களின் சீர்கெட்ட பட்டியலில் தான், எவ்விதக் கூச்சமும், வெட்கமும்

இல்லாமல், எசேக்கியேல் தீர்க்கனுடைய நாட்களில் வாழ்ந்த யூதாவின் மார்க்க முன்னோடிகள் தங்களையும் இணைத்து வைத்திருந்தனர். எங்கும் வியாபித்திருந்து, எல்லாவற்றையும் கவனிக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய தம்மைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த இந்த அற்ப எண்ணத்துக்கு அடி கொடுக்கும்படியாகவே எசேக்கியல் தீர்க்கனுக்குத் தரிசனத்தில் இவ்விதம் வெளிப்படுத்திப் பேசியுள்ளார். " அப்பொழுது அவர் என்னை நோக்கி; மனுபுத்திரனே, இஸ்ர வேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? *கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை;* கர்த்தர் தேசத் தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார் " (எசே 8:12).

தேவனுக்கு இப்படிக் கோபத்தை உண்டு பண்ணின இவர் கள் செய்கை பற்றி மேலுமாகத் தெரிந்து கொள்ள நமது வழக்கத் தின்படியாக, பின்னணிக் காரியங்களைப் பார்த்து விடுவோமா?

யூதா சரித்திரத்தின் இருண்ட காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவர் இந்த எசேக்கியேல். இவர் ஒரு ஆசாரியராகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்துள்ளார். நேபுகாத்நேச்சார், இரண்டாம் முறையாக எருசலேமை முற்றுகையிட்ட போது, பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்டு, தீர்க்கதரிசன ஊழியத்தை தன் முப்பதாவது வயது தொடங்கிச் செய்தவர். அந்நிய மண்ணில் தீர்க்கதரிசன ஊழியத்தை அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால், ஏசாயா, எரேமியா போன்று எல்லா தேவக் காரியங் களையும் வெளிப்படையாகப் பேசாமல், உவமைகளாலும், உருவகங்களினாலும், அடையாளங்களினாலும் பேசியுள்ளார். பாபிலோனில் அடிமைகளாக " ***உலர்ந்த எலும்புகளைப் போல***" இருந்தாலும், " ***அது உயிரடையும்*** " என்ற நம்பிக்கையின் செய்தி யும் இவருடைய தீர்க்கதரிசன ஊழியத்தில் அடக்கம். யூதர்களின் அவல நிலை மாற்றப்பட்டு, எதிர்கால மகிமைக்கான காரியங் கள் நிலைநிறுத்தப்படும் என்றும் எடுத்துரைத்தார். அப்பொழுது, " அவரே கர்த்தர் " என்று அவர்கள அறிந்து கொள்ள முடியும்.

நாற்பத்தெட்டு அதிகாரங்களைக் கொண்ட எசேக்கியேல் நூலை நாம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி, அதிகாரம் 1-3, எசேக்கியலுக்குக் கிடைத்த தேவ தரிசனமும், வழி நடத்துதலும்; இரண்டாம் பகுதி, அதிகாரம் 4-24, யூதாவின் மேல் வரப்போகும் நியாயத்தீர்ப்பு; மூன்றாம் பகுதி, அதிகாரம் 25-32, சுற்றிலுமுள்ள புறஜாதியாரின் மீது நியாயத்தீர்ப்பு; நான் காம் பகுதி, 33-48, இஸ்ரவேலும், தேவாலயமும் மீட்கப்படுதல். இதில், இரண்டாம் பகுதியில் தான் நமது தலைப்புக்கான அதி காரம் எட்டு இடம் பெற்றுள்ளது. இந்த எட்டாம் அதிகாரத்தின் முற்பகுதி (1-4). தேவனுடைய மகிமை பற்றிய தரிசனத்தையும், அடுத்த பகுதி (5-18) தேவாலய அருவருப்புகள் பற்றிய தரிசனத் தையும் பற்றிப் பேசுகிறது.

இந்த தேவாலய அருவருப்புகளில், முதலாவது, எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகங்களும் (5,6); இரண்டாவது, சுவற்றில் காணப்பட்ட சித்திரங்களும் (7-12); மூன்றாவது, தம்மூசுக்காக ஸ்திரீகள் அழுவதும் (13,14); நான்காவது, சூரிய நமஸ்காரமும் (15-18) இடம் பெற்றுள்ளது. இந்த அருவருப்புகளில் இரண்டாவதாக வருகின்ற " *சுவற்று சித்திர* " பகுதியில் தான் "கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை " (8-12) என்ற நமது தலைப்புச் சொற்றொடர் இடம் பெற்றுள்ளது.

அங்கே தேவன், எசேக்கியேலை பிரகாரத்தின் வாசலுக்குக் கொண்டு போய், சுவரிலே துவாரமிடச் செய்து, உள்ளே போய் அவர்கள் அங்கே செய்கிற " கொடிய அருவருப்புகளை " பார்க்கும்படி செய்தார். உள்ளே, " ...... சகலவித ஊரும் பிராணிகளும், அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந் தீர்க்கப்பட்டு, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபது பேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன் தன் கையிலே தன்தன் தூப கலசத்தைப் பிடித்துக் கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. அப்பொழுது அவர் என்னை நோக்கி; மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? ***கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை;*** கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார் " (8:7-12).

ஒருவரும் கவனிக்க முடியாது என்ற நினைப்போடு நான்கு சுவர்களுக்குள்ளாக ஒளிந்து கொண்டு, தேவன் அருவருக்கக் கூடிய நரகலான விக்கிரகங்களை சுவர்களில் வரைந்து, தூபங் காட்டிப் பணிந்து கொண்டு, கர்த்தர் எங்களைக் காண்கிறதில்லை என்று சொன்னவர்கள் யார் தெரியுமா? *இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள்.* அதாவது, ஜனங்களை நல்வழியில் நடத்த வேண்டியவர்கள். இவர்கள் எவ்வளவு பெரிய துரோகத்தைச் செய்திருக்கிறார்கள் பாருங்கள்! அவர்களில் ஒருவனுடைய பெயரை ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவன் சாப்பானின் குமாரனாகிய யசனியா. இந்த சாப்பான், யோசியா ராஜாவின் கீழாக இருந்த ஓர் உண்மையுள்ள வேதபாரகன் (II ராஜா 22:8).

இந்த 70 மூப்பர்களில் ஒருவனாக இருந்த " யசனியா " என்ற பெயரின் பொருள், " யெகோவா கவனிக்கிறார் " அல்லது " தேவன் காண்கிறார் " என்பது. இவன் பெயரே இப்பொருளைக் கொண்டதாக இருந்தும், தன் பெயருக்குண்டான பொருளே தெரியாத ஓர் ஈன வாழ்க்கையை, தலைவன் என்ற பெயரில் இவன் நடத்தியிருக்கிறான். எவ்வளவு கேவலம் பாருங்கள்! இவன் செய்வதற்கெல்லாம் ஆமாம் சாமி போடுவதற்குக் கூட்டாளிகள் வேறு 70 பேர். இந்த 70 பேர் புடை சூழ அவர்கள் நடுவில்

இந்த உத்தம புத்திரன்! நல்ல குடும்பத்தில் பிறந்து, சீரான வாழ்க்கை நடத்திய இவன். இப்பொழுது, சீரழிந்து போய், தேவ கோபத்திற்குத் தன்னை விற்றுப்போட்டான். இவனுடைய இத்துணிகர செயலுக்கான காரணம் என்ன? நான்கு சுவர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு இரகசியமாக காரியங்களை நாங்கள் செய்கிறோம், அதுவும் மூப்பர்கள் என்ற அந்தஸ்தோடு செய்கிறோம், இன்னும் கூட இருப்பவர்களின் அங்கீகாரத்தோடும், வெகுஜன ஆதரவோடும் செய்கிறோம் என்பதைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்? யார் எங்களைப் பார்க்கப் போகிறார்கள்? யார் எங்களைக் கேட்கப் போகிறார்கள்? யார் எங்கள் கூட்டத்தைத் தட்டிக் கேட்க முடியும்? என்பது தானே இவர்களின் நினைப்பு. ஆனால், அவர்களின் செயலும், நினைப்பும் தவறு என்பதை தேவன் அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும், எசேக்கியேலுக்குக் காட்டின தரிசனத்தின் மூலமாக வெளிப்படுத்தி விட்டார்.

சரி, இப்பொழுது, அந்த எழுபது பேரின் செய்கையும், நினைப்பும், எசேக்கியேலுக்கான தேவ தரிசனமும் இந்நாளில் வாழும் நமக்கு என்ன பாடங்கள் கற்றுக்கொடுக்கிறதென்று பார்ப்போம்.

**I தீமை செய்கிறவர்கள் " இரகசியம் " என்ற சுவருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது.**

" கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை " என்ற இஸ்ரவேல் மூப்பர்களின் மோசமான நினைப்பு நமக்குக் கற்றுத் தரும் முதல் பாடம், பாவங்களை இரகசியமாகச் செய்து கொண்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாது என்பது.

தேவனுடைய பிரமாணங்களை நன்றாக அறிந்த இந்த ஜனத்தின் மூப்பர்களால் எப்படி இப்படி நினைக்க முடிந்ததென்பது ஆச்சரியமாக உள்ளது? இவர்கள் காற்றுப் புகாதபடி சுவர்களை எழுப்பி உள்ளே வேடிக்கை காட்டியதை, ***தேவனுடைய பூமியெங்கும் உலாவும் கண்கள்*** (II நாளா 16:9) கண்டு அம்பலப்படுத்தியது. இவர்கள் காற்றுக்கூட புகாது என்று நினைத்த அறைக்குள், தேவன் ஓட்டை போட்டு ஆளை உள்ளே அனுப்புகிறார். மனிதனுடைய திட்டங்கள் தேவனுக்கு முன்பாகத் தாக்குப் பிடிக்க முடியுமா?.

சங்கீதங்களின் மகுடம் என்று நம்மால் அலங்கரிக்கப்பட்டு, அந்த மூப்பர்களாலும் அறிந்து வைக்கப்பட்டிருந்த சங்கீதம் 139, தேவன் எல்லாவற்றையும் கவனிக்கிறார், காண்கிறார் என்பதை எவ்வளவு பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறதென்று பாருங்கள். " *கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்... என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்..... இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன், நான் வானத்திற்கு ஏறினாலும்.... பாதாளத்தில் படுக்கை போட்டாலும் ..... சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும் ...... உமது வலது கரம் என்னைப் பிடிக்கும் " (1-10)* என்று.

இதுமட்டுமா? இவர்கள் வாழ்ந்த காலத்தைச் சேர்ந்த தீர்க்கன் எரேமியாவைக் கொண்டு, " *நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ?* " என்றும், " *யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ?* " (எரே 23:23,24) என்றும் தேவன் நறுக்கென்று கேட்டிருப்பது கூடவா இவர்களுக்கு உறைக்காமல் போனது? ஒரு வேளை, பக்திச் சீரழிவிற்கு ஒருவனோ அல்லது ஒரு கூட்டமோ தலைப்பட்டுவிட்டால், அவனையோ அல்லது அவர்களையோ எதுவும் தடுக்க முடியாது போலல்லவா தெரிகிறது! இப்படிப்பட்ட கேடான நிலைக்கு நாம் யாரும் போகாமல் நம்மைக் காத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

அருமையானவர்களே, தேவனுக்கடுத்த நமது பக்தி வாழ்க்கையில், நம்முடைய செய்கைகளும், நினைப்பும் எப்படிப்பட்டதாக இருக்கிறது? என்னுடைய ஒவ்வொரு செய்கையையும் ஒருவேளை நான் எந்த இடத்தில் இருந்து கொண்டு அதைச் செய்தாலும், சர்வ வல்லமையுள்ள தேவன் என்னைக் காண்கிறார். என்ற நினைப்போடு நாம் வாழ்ந்து கொண்டுள்ளோமா? அல்லது கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற கோஷத்தோடு வாழ்ந்து கொண்டுள்ளோமா? நம்முடைய காலத்தைச் சேர்ந்த எபிரெய ஆசிரியர் இது பற்றிக் கூறுவதை கவனியுங்கள். " *அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்* " (எபி. 4:13) என்று.

தேவன் எல்லாவற்றையும் காண்கிறவராய் இருக்கிறபடியால், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகள் ஒவ்வொன்றையும் கடைப்பிடித்து உத்தம வாழ்க்கை நடத்துவது அவசியம். (பிர 12:13)

## II. தீமை செய்கிறவர்கள் " பதவி " என்ற சுவருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது.

" கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை " என்ற இஸ்ரவேல் மூப்பர்களின் மோசமான நினைப்பு, நமக்குக் கற்றுத் தரும் இரண்டாவது பாடம், பாவங்களை பதவி தரும் அதிகாரத்தோடு செய்தாலும் தப்பிக்க முடியாது என்பது.

சுவற்றுக்குப் பின்னால் ஒளிந்து கொணடு தவறு செய்தவர்கள் இஸ்ரவேலின் மூப்பர்கள். அந்நாட்களிலிருந்த ஜனங்களின் தலைவர்கள். மரியாதைக்குரியவர்கள் இப்படி ஜனங்களின் மதிப்பையும், மரியாதையையும் பெற்றவர்கள் கூட்டாகச் சேர்ந்து கொண்டு ஜனங்களை தேவனுக்காக வழிநடத்துவதற்குப் பதிலாக, இவர்களே தேவனுக்கு விரோதமான காரியங்களில் துணிகரமாக ஈடுபட்டுள்ளனர். இவர்களெல்லாம் தான் அன்றைய ஆன்மீகத் தலைவர்கள்! தலைவர்கள் என்றாலே இப்படித் தறிகெட்டுத்தான்

திரிவார்களோ? ஆனால், நமக்கு இங்கே ஆறுதலைக் கொடுக்கக் கூடிய செய்தி, தேவன் பதவி, பட்டத்தோடு அலைபவர்களுக் கென்று ஒரு தனிச் சட்டம் வைத்துக் கொள்வதில்லை என்பது.

எசேக்கியேலின் நாட்களிலென்ன, நம்முடைய இரட்சகரின் நாட்களிலும் ஜனங்களை ஆன்மீக ரீதியாக வழிநடத்தும் பொறுப் பிலிருந்தவர்கள் இவ்விதமாகத் தானே செயல்பட்டுள்ளார்கள். ஆகையால் தானே இயேசு ஆண்டவர் அவர்களைக் " *குருடரான வழிகாட்டிகள்* " என்று ஓங்கிக் குட்டியுள்ளார். (மத். 15:12-14). அத்தோடு விட்டாரா? இல்லையே. *விருந்துகளிலும், ஜெப ஆலயங்களிலும் முதன்மையான இடத்தை நாடி, சந்தைவெளி களில் வந்தனங்களையும், ஜனங்களிடமிருந்து ரபீ, ரபீ என்ற சிறப்பு மரியாதையையும் விரும்பிய ஜனங்களின் ஆன்மீக வழி காட்டிகளாக* இருந்த வேதபாரகர்களையும், *பரிசேயர்களையும்* " *மதிகெட்டவர்கள்* " என்றும், " *குருடர்* " என்றும், " *வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறை* " என்றுமல்லவா இடித்து, இடித்துச் சாடியுள்ளார். (மத். 23 அதி). அதாவது, பதவி என்ற அந்தஸ்து, தலைவன் என்ற அந்தஸ்து, பெரிய மனிதன் என்ற அந்தஸ்து போன்ற சுவர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, தன் விருப்பம் போல் தேவ காரியத்தில் எதை வேண்டுமானாலும் செய்வதற்கு பரலோகத்தின் தேவனோ அல்லது நம்முடைய இரட்சகரோ ஒருபோதும் அனுமதி கொடுப்பதில்லை.

அப்படியானால், அருமையானவர்களே, இக்காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? ஜனங்களை பக்தி காரியங்களில் வழிநடத்தும் பொறுப்பில் உள்ள நம்மில் எத்தனை பேர் அப்பொறுப்பை நீதியாய் நிறைவேற்றுகிறவர்களாக உள்ளோம்? தேவ ஆவியானவர், " ஒருவன் போதித்தால் தேவனு டைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் " (1பேது. 4:11) என்று நமக்குச் சொல்லியிருக்கும் போது, நாம் போய் போதிக்கு மிடமெங்கும், உண்மையாகவே இப்படித்தான் போதிக்கிறோ மா? அல்லது நான் பெரிய மனிதனாக இருக்கிறேன், எனவே, நான் எதை வேண்டுமானாலும் போதிக்கலாம், செய்யலாம் என்று " அந்த 70 பேர் " போன்ற நினைப்பில் உள்ளோமா?

ஒரு சமயம், கிறிஸ்துவின் அப்போஸ்தலருக்கு விரோதமாக மூர்க்கவெறி கொண்டு, அவர்களைக் கொலை செய்யும்படி எழும்பின ஆலோசனைச் சங்கத்தாருக்கு, கனம் பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் கொடுத்த எச்சரிக்கையை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்வது அவசியம். " *தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்* " (அப்.5:39). ஆம், கர்த்தருக்கும், கர்த்தருடைய காரியங்களுக்கும், கர்த்தருடைய சபைக்கும், கர்த்தருடைய உபதேசத்துக்கும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் விரோத மாகப் போரிட்டு நாம் ஜெயிக்க முடியாது.

ஆகையால், நம்மைக் கடைசி நாளில், நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48) கிறிஸ்துவின் உபதேசத்துக்கு (II யோவான்

9) நம்மை சமூலமாக ஒப்புக்கொடுத்து வாழ நம்மை ஒப்புக்குக் கொடுக்காமல், தெளிவான சிந்தையுடன் முழுமையாக ஒப்புக் கொடுப்போமாக!.

## III. தீமை செய்கிறவர்கள் " பெரும்பான்மை " என்ற சுவருக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது.

" கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை " என்ற இஸ்ரவேல் மூப்பர்களின் மோசமான நினைப்பு, நமக்குச் சொல்லும் இன்னுமொரு பாடம், பெரும்பான்மையோரின் ஆதரவோடு ஒருவன் பாவம் செய்தாலும் தப்பிக்க முடியாது என்பது.

எசேக்கியேலின் நாட்களில் வாழ்ந்த மூப்பர்கள் அனைவரும். அதாவது 70 பேரும் யசனியாவின் தேவ விரோதச் செயலுக்கு தங்கள் அங்கீகாரத்தை முழுமையாகக் கொடுத்துள்ளனர். யசனியா அவர்கள் நடுவில் நின்றதாக வசனம் சொல்லுகிறது (எசே. 8:11) எரேமியாவின் ஊழியம் யூதாவில் அப்பொழுது தோல்வியடைந்திருந்தபடியால், இந்த யசனியாவுக்கு ஜனங்களின் ஒட்டு மொத்த ஆதரவும் கிடைத்திருப்பதாகவே தெரிகிறது (எரே. 6:16,17). எது எப்படியிருந்த போதிலும், தேவனுக்கு விரோதமான செயலை ஒருவன் தனி ஆளாக நின்று செய்தாலும் தவறு தான், பெரும்பான்மை பலத்தோடு செய்தாலும் தவறு தான். தேவன் ஆரம்பத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளைகளில் ஒன்று, " *தீமை செய்ய திரளான பேர்களைப் பின் பற்றாதிருப்பாயாக...* " (யாத் 23:2) என்பது.

ஆன்மீக உலகில் மலிந்து கிடக்கும் அலங்கோலங்களைப் பார்க்கும் போது எனக்கு அடிக்கடி ஒரு சந்தேகம் வரும். அது, வழி நடத்துகிறவர்களால் ஜனங்கள் கெட்டுப் போகிறார்களா அல்லது ஜனங்கள் காட்டும் அர்த்தமற்ற ஆதரவால் வழிகாட்டிகள் வீணாகிப் போகிறார்களா என்று. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், பழிக்குச் சொந்தக்காரர்கள் வழி நடத்துகிறவர்கள் என்பது போலத் தெரிந்தாலும், ஜனங்களும் இக்காரியத்தில் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்றே தெரிகிறது. எப்படியெனில், ஒரு சமயம், " ***தேவ தாசனாகிய மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாம தமாகிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள ஆரோனிடத்தில் கூட்டங்கூடி அவனை நோக்கி; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும் என்றார்கள்*** " (யாத். 32:1).

தேவனுடைய பார்வையில் கனம் பெற்றவனாக இருந்த ஆரோன், ஜனங்களின் ஏகோபித்த ஆதரவுக்கு அடிபணிந்து, தேவன் விக்கிரகங்கள் பற்றி எச்சரித்துச் சொன்னவைகளை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு, ஜனங்களைப் பிரியப்படுத்த கன்றுக்குட்டியை செய்தான். இங்கே, ஜனங்களை வழிநடத்தும் பொறுப்பிலிருந்த ஆரோன், ஜனங்களின் விருப்பத்துக்கு

வளைந்து கொடுத்து, தேவ கட்டளையை மீறினான். அப்பொழுது அவனுக்கு ஜனங்களின் பெரும்பான்மை ஆதரவும், ஆரவாரமும் இருந்தபடியால் தான் செய்வது " மகாபெரிய பாவம் " (32:31) என்பது விளங்கவேயில்லை. ஏன்? பாவத்திற்குக் கிடைத்த வெகுஜன அங்கீகாரம்! ஆனால், தேவனோ, " ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் " (32:7) என்றே சொன்னார்.

ஆகையால், நம்முடைய பக்தி வாழ்க்கையில் செய்யப் படும் ஒரு செயலுக்கு எத்தனை பேர் ஆதரவிருக்கிறது என்பது ஒருபோதும் முக்கியமல்ல. மாறாக, தேவன் அந்தக் காரியத்தைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதே முக்கியம். வெகுஜன ஆதரவோடு பக்தியின் பேரால் நடக்கும் எல்லாமே சரி என்றால் பொன் கன்றுக்குட்டியும், அதற்காகப் போடப்பட்ட ஆட்டம், பாட்டமும் சரிதானே. ஆனால், அது சரியா? பொன்கன்றுக்குட்டி யை இஸ்ரவேல் ஜனங்கள் வணங்கினார்கள். ஆனால், தேவன் அந்த விக்கிரகத்தையும், அதற்கான வணக்கத்தையும் ஏற்றுக் கொண்டாரா? இல்லவே இல்லை. மாறாக, கோபங்கொண்டு அவர்களைத் தண்டித்தார்.

எனக்கன்பானவர்களே, பரம கானானுக்கான நம்முடைய பயணத்தில், ஆன்மீகம் என்ற பெயரில் நடத்தப்படும் கூட்டங் களுக்கு திரளாகக் கூடம் ஜனங்களைப் பார்த்து மிரண்டு, வசனத் துக்கு விரோதமானவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவ தண்டனைக்கு ஆளாகி விடக்கூடாது. அந்த ஊழியர் தவறான வராக இருந்தால் எப்படி இவ்வளவு கூட்டம் சேரும், அந்த சபை மோசமாக இருந்தால், எப்படி இத்தனை ஜனங்கள் அங்கு செல்வார்கள், அந்த உபதேசம் சரியில்லாமல் இருந்தால் எப்படி ஏராளமான வர்கள் அதை ஏற்றுப் பின்பற்றுவார்கள் என்றெல்லாம் குதர்க்க மாக யோசிக்க வேண்டாம். சத்தியத்தின்படி செய்வதற்கு வெகுஜன அங்கீகாரம் தேவையேயில்லை.

நீதிமானாகிய நோவா தனக்கு வெகுஜன அங்கீகாரம் வேண்டுமென்று நினைக்காமல், தேவன் கட்டளையிட்டவை களையெல்லாம் போதித்துக் கடைப்பிடித்தான். (ஆதி. 6:22), அதுபோல, நாம் ஒவ்வொருவரும், நம்முடைய பக்தி வாழ்க்கை யில் பெரும்பான்மை சுவருக்குப்பின் ஒளிந்து கொள்ள முயற்சிக்காமல், பவுலடியார் போல, " கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் " (பிலி. 1:21) என்று சொல்லத்தக்க ஒரு பக்தி வாழ்க்கையை நடத்தி பரலோக பாக்கியம் பெறுவோமாக! ஆமென்.

---

**அக்டோபர் 2,3-2009 தேதிகளில்** நடக்கும், வேதாகம கருத்தரங்கிற்கு உங்களை அன்போடு அழைக்கிறேன். ஜெபத்தோடு வாருங்கள். – ஆசிரியர்

---

" திருமறை ஆசான் " சகோ. ராஜநாயகம் மற்றும் சகோ. ஜெர்ரிபேட்ஸ் (Jerry Bates), சகோ. பவுலா பேட்ஸ் (Paula Bates) அவர்கள் கலந்து கொள்ளும்

## வேத பாட வகுப்புகள் மற்றும் நற்செய்திக் கூட்டங்கள்

| தேதி | கருத்தரங்கம் | இடம் |
|---|---|---|
| 2.10.09<br>3.10.09<br>(வெள்ளி, சனி) | வேதாகம கருத்தரங்கம் | காங்கயம்<br>Contact No.<br>98427 30382 |
| 4.10.09<br>(ஞாயிறு) | காலை ஆராதனை செய்தி<br>சகோ. ஜெர்ரி பேட்ஸ் (Jerry Bates)<br>பெண்கள் வகுப்பு<br>(மதியம் 12.00 மணி)<br>சகோ. பவுலா பேட்ஸ் (Paula Bates) | காங்கயம்<br>Contact No.<br>98427 30382 |
| 4.10.09<br>(ஞாயிறு மாலை) | நற்செய்திக் கூட்டம்<br>மாலை 6.00 மணி | திருப்பூர்<br>(Bro. Sekar)<br>98426 65632 |
| 5.10.09<br>(திங்கள்) | பகல் நேர வகுப்பு<br>காலை : 10.00 – மாலை : 4.00 மணி | முசிறி<br>(Bro. Prabhu)<br>93440 63013 |
| 6.10.09<br>(செவ்வாய்) | நற்செய்திக் கூட்டம்<br>மாலை 6.00 மணி | சென்னிமலை<br>(Bro. Panneer Selvam)<br>99768 73235<br>97897 47445 |
| 8.10.09<br>(புதன்) | நற்செய்திக் கூட்டம்<br>மாலை 6.00 மணி | கொங்கணாபுரம்<br>(Bro. Abraham)<br>99760 57121 |
| 8.10.09<br>(வியாழன்) | பகல் நேர வகுப்பு<br>காலை 10.00 மணி | ஏற்காடு, (Bro. Joseph)<br>99525 23673, 97150 47581<br>97512 79730 |
| 9.10.09<br>(வெள்ளி) | மாலைக் கூட்டம்<br>மாலை 6.00 மணி | திருப்பத்தூர்<br>(Bro. Samma)<br>99403 57811 |

இக்கூட்டங்களில் பங்கு பெற்று உண்மைச் சத்தியத்தை அறிந்து, ஆத்தும இரட்சிப்படைந்து, மெய்யான சமாதானத்துடன் வாழ உங்களை அன்போடு அழைக்கிறோம்.

– ஆசிரியர்

# உங்களால் என்ன செய்ய முடியும்?

அநேக சகோதரர்கள் ஆராதனை உற்சாகமாக இல்லை என்று சொல்வதை நாம் அடிக்கடி கேட்கிறோம்; அல்லது சபையின் மற்ற அங்கத்தினர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் உணர்கிறார்கள்; இன்னும் சிலர் தங்களை யாரும் அழைப்பதில்லை, சந்திப்பதில்லை என்றும் தங்கள் தேவைகள் யாருக்கும் தெரிவதில்லை என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

இன்னும் சிலர் தங்களை ஆராதனையில் ஏதாவது செய்வதற்காகவோ அல்லது சபை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்கோ யாருமே தங்களை ஒருபோதும் அழைப்பதில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள் தங்களை தேவையற்றவர்கள் என்று உணர்கிறார்கள் அல்லது அநேகமாக தாங்கள் தகுதியற்ற வர்கள் அல்லது திறமை இல்லாதவர்கள் என்று நினைக்கிறார்கள்.

இவ்விதமாக சிந்திப்பதில் என்ன பிரச்சினை இருக்கிறது? முதலில் இவ்விதமாக சிந்தையை செலுத்துவதே தவறு. இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் ஆராதனை பொழுதுபோக்காகவும், உணர்ச்சிவசப்படத்தக்கதாகவும் இல்லையென்றால் தங்கள் நேரம் வீணடிக்கப்படுகிறதாக உணர்கிறார்கள். ஆனால், ஆராதனை சம்மந்தமான வசனங்களை வாசித்துப் பாருங்கள். ஆராதிப்பவர் பொழுதுபோக்கிற்காகவோ அல்லது அவரை வசப் படுத்தும் விதத்திலோ அவருடைய அனுபவம் இருக்க வேண்டும் என்று எங்குமே இல்லை. நாம் உண்மையாக ஆராதிக்கும் போது நாம் தேவனுக்கு துதிகளைச் செலுத்தி, நன்றிகளை ஏறெடுத்து, கனப்படுத்தி நம்முடைய சிந்தையை தேவன் மீது செலுத்த வேண்டும். உண்மையாகவே, செய்முறையின் ஒரு பகுதியாக நாம் பக்தி விருத்தியடையும்படியாக வேத வசனங்களை படிக்க வேண்டும். இதுவும் கூட தேவனைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்வதற்கும் அந்த வேத அறிவின் மூலமாக நாம் தேவ சாயலை அடையும்படியாகவும் இருக்க வேண்டும்.

வேத அறிவையும், படிப்பையும் உணர்ச்சிவசப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்தவ ஆராதனைக்கும் வளர்ச்சிக்கும் ஏன் அவசியமானது என்று தேவன் வலியுறுத்துகிறார்? ஏனென்றால், உணர்வுகள் நிலையற்றது என்பதை தேவன் அறிந்திருக்கிறார். எத்தனை முறை ஒன்றுமே இல்லாததற்கு நம்மை நாம் உயர்த்திக் கொள்கிறோம்? அதைப்போல ஒன்றும் இல்லாததற்கு நாம் சோர்வடைகிறோம். எத்தனை முறை ஆராதனை நமக்கு வெறுமையானது போல் தெரிகிறது அது உணர்ச்சிவசப்படுவதில் நாம் குறைவைத்ததினாலா? தேவனுக்கு முன்பாக நாம் சரியாயிருப்பதற்கு நிச்சயமான வழிமுறை நம்மீது அல்ல தேவன் மீது சிந்தை வைத்து அவரை ஆராதிப்பது தான்; அந்த ஆராதனை ஆவியோடும் (நம்

முழு இருதயத்தோடும்) உண்மையோடும் இருக்க வேண்டும் துரிதமான உணர்வுகளின் வெளிப்பாடாயிருக்கக் கூடாது.

இன்னும் சிலர் ஆராதனை அலுப்பாயிருக்கிறது என்று சொல்வதற்கான காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இந்த ஒப்புமையை சற்று சிந்தித்துப்பாருங்கள்; ஒரு மாணவன் தன்னுடைய வாழ்நாட்கள் முழுவதும் கல்லூரி வகுப்பில் செலவழித்து விட்டு தன்னுடைய அறிவை வாழ்க்கையின் தேவைகளை சந்திப்பதற்கு உண்டான பொருள் ஈட்டுவதற்கு பயன்படுத்தவில்லை என்றால், அவன் என்ன வாழ்க்கையில் சாதித்திருக்கிறான்? வருடந்தோறும் அதே பாடங்களை மறுபடியும், மறுபடியும் படித்தும், அதை ஒருபோதும் பயன்படுத்தாத பட்சத்தில் அது அலுப்பாகிவிடும் அப்படித்தானே?

இப்போது, தங்கள் ஜீவிய நாட்கள் முழுவதும் வேதபாட வகுப்புகளுக்கும், பிரசங்கங்கள் கேட்பதற்கும் செலவு செய்தும் அங்கே பெற்றுக்கொண்ட அறிவை மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதிக்க பயன்படுத்தவில்லையென்றால் எப்படி இருக்கும்? அவர்கள் இளவயதிலிருந்தே கிறிஸ்தவர்களாயிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் மனம் மாற்றிய ஒரு ஆத்துமாவை கூட அவர்களால் சுட்டிக்காட்ட முடியாது. கற்றுக்கொண்ட பாடங்களை அவர்கள் தங்களுக்குள்ளே வைத்துக்கொண்டபடியினாலும், அதை வேறுயாருக்கும் வெளிப்படுத்தாதபடியினாலும் இப்படி பிரசங்கங்களை கேட்பவர்கள் அலுப்பாயிருக்கிறது என்று சொல்வதில் ஆச்சரியமில்லை!.

கர்த்தருடைய சபையின் உண்மைத்தன்மையானது ஒருவர் எத்தனை வாரங்கள் ஆராதனையில் கலந்து கொள்கிறார் என்பதை வைத்து தீர்ப்பு செய்யப்படுகிறதா? அது உண்மைதான், ஒரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவன் சபை கூடும் போதெல்லாம் தானும் அங்கே இருக்க விரும்புவான், ஆனால், இது நம்முடைய வேலை அல்ல, ஆராதனையில் தேவனுடைய சமூகத்தில் வந்து அவரைத் துதிப்பதற்கும், கனப்படுத்துவதற்கும் நமக்கு கிடைத்த சிலாக்கியமாக கருத வேண்டும். எனவே, நம்முடைய வேலை அவருக்காக கனி கொடுப்பதுதான்.

நீங்கள் ஒருவருக்கு போதிக்கும் போது அவரை சபை கூடி வரும் போது உங்கள் அருகாமையில் உட்கார செய்யும் அளவுக்கு வெற்றிப் பெற்றால், நீங்கள் தன்னிச்சையாகவே என்ன செய்கிறீர்கள் தெரியுமா? சபையில் செய்யப்படும் பிரசங்கத்தை நீங்கள் அவருடைய காதுகள் மூலமாக கேட்பீர்கள், அது உங்களுக்கு மிக அவசியமானதும், புதுமையானதுமாய் இருக்கும்! அதனால் தான் தேவன் உலகத்தில் சுவிசேஷம் அறிவிக்கும் வேலையை தேவதூதர்களிடம் விடாமல் மனிதர்களிடத்தில் விட்டிருக்கிறார், ஏனென்றால், மனிதர்கள் மற்றவர்களுக்கு

போதிக்கும் போது நாமும் படிப்பிக்கப்படுவோம், பலப்படுத்தப் படுவோம், சத்தியத்தில் நிலை கொண்டிருப்போம். நாம் சுவிசே ஷத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாத வரை, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திலோ அல்லது ஆராதனையிலோ சோர்வு காணப்படும்.

எனவே, உங்களால் என்ன செய்ய முடியும்? யாரோ ஒருவர் உங்களை அழைப்பதற்கோ, உங்களுடைய உணர்வு களுக்கு உதவி செய்வதற்கோ, நீங்கள் ஒன்றை செய்யும்படியாக சொல்வதற்கோ நீங்கள் காத்திருக்க வேண்டாம். முதல் படியை நீங்கள் எடுத்து வையுங்கள்! பணியின் பல்வேறுபட்ட நிகழ்ச்சி களைக் கவனியுங்கள். சமுதாய மற்றும் பொழுதுபோக்கு பகுதி களை பார்க்க வேண்டாம் - சபை ஈடுபட்டிருக்கிற பணியின் நிகழ்ச்சிகளைப் பாருங்கள். உங்கள் திறமைகள் நீங்கள் எதைச் செய்ய பக்குவப்படுத்துகிறதோ அதை தீர்மானித்து வேலை செய்ய நீங்களாகவே முன்வாருங்கள். யாரோ ஒருவர் உங்க ளிடம் வந்து உங்கள் உதவியை கெஞ்சி கேட்கும் வரை காத்தி ருக்க வேண்டாம். நீங்கள் கர்த்தருக்குள் இந்த காரியங்களைச் செய்ய தேடுவதினாலும், அதன்படி செய்வதினாலும் வளர்ச்சியை நோக்கிய வாழ்க்கையை வாழ முடியும்.

உங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்களா? நிச்சயமாகவே உங்களுக்கு இருக்கிறார்கள்; ஆனால், உண்மையாகவே அவர்க ளோடு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள முயற்சி செய்திருக்கிறீர் களா? உங்களோடு ஆராதனையில் கலந்து கொள்வதற்கு அவர் களை உற்சாகப்படுத்தியிருக்கிறீர்களா? உங்களுடைய வீட்டி லோ அல்லது அவர்களுடைய வீட்டிலோ வேத பாட வகுப்பு நடத்த முயற்சி செய்திருக்கிறீர்களா? அஞ்சல் வழியில் பாடங் களைப் படிக்க அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறீர்களா? அல்லது வேறு இலக்கியங்களை அவர்களோடு பகிர்ந்தளித்திருக் கிறீர்களா?.

உங்கள் பிராந்திய சபையில் உள்ள அங்கத்தினரோடு சேர்ந்து பலவீனமாயிருக்கிற சபைக்கு சென்று அங்கே உள்ள பிராந்திய சபையாரோடு சேர்ந்து கதவைத் தட்டுகிற பிரசாரத்தில் ஈடுபட்டு வீட்டு வேதபாட வகுப்புகளுக்கு யாரையாவது அழைத்திருக்கிறீர்களா? சபையில் யாருமே இதுபோன்ற செயல் பாடுகளில் ஈடுபடாவிட்டாலும் கூட ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியே சென்று ஒரு குறிப்பிட்ட தெருவில் மதசம்மந்தமான மக்கள் தொகை கணக்கெடுத்து, பக்தி சம்மந்தமான காரியங் களுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களை கண்டுபிடித்து விருப்பமுள்ளவர்களை வேத பாடத்திற்கு சேர்த்துக்கொள்ள லாம். அவர்களிடம் ஒரு அட்டையை கொடுத்து தொலைக் காட்சியில் இடம் பெறும் நிகழ்ச்சிகளையும், வானொலியில் ஒலி பரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளையும், சபையின் ஆராதனை நேரங்களையும், பிராந்திய சபையினால் செய்யப்படும் மற்ற சமுதாய சேவைகளையும் அதில் எழுதிக் கொடுக்கலாம்.

அதன்பின்பு விருப்பமுள்ளவர்கள் வீட்டிற்கு சென்று வேத பாட வகுப்புகளை நடத்துங்கள் அல்லது குறைந்தபட்சம் பிரசங்கியாரோடு அல்லது மூப்பர்களோடு அல்லது வகுப்பு நடத்துபவரோடு கூட செல்லுங்கள். வருங்காலத்தில் மற்றவர்களுக்கு தலைமைத்துவத்தை அளிக்கும் வகையில் நீங்கள் நன்றாக பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மறுபடியும் கிறிஸ்தவர்கள் வேத வசனங்களை நன்கு அறிந்தவர்களாகவும், மற்றவர்களுக்கு போதிக்க ஆயத்தமாகவும் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட இல்ல அழைப்புகளினால், நீங்கள் மார்மன் சபையைச் சார்ந்தவர் என்றோ அல்லது யெகோவா சாட்சிகள் சபையைச் சார்ந்தவரென்றோ தவறாகப் புரிந்து கொள்ளப்படுவீர்கள், ஏனென்றால், அவர்கள் தான் கடந்த அநேக வருடங்களாக வெளியில் சென்று சுறுசுறுப்பாக, வல்லமையாக போதித்துக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் எங்கே போயிருக்கிறார்கள்? அவர்கள் கலையரங்கத்தில் பார்வையாளர்கள் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்! சுவிசேஷம் அறிவிப்பது உற்சாகமாக நடப்பதில்லை.

சத்தியத்தின் குரல் புஸ்தகம் ஒரு பெட்டி ஆர்டர் செய்து பிரதிகளை மருத்துவமனைகளில் காத்திருக்கும் அறைகளில், இன்னும் வேறு வியாபார ஸ்தலங்களில் வையுங்கள். அந்த காத்திருக்கும் அறைகளில் யெகோவா சாட்சிகள் விட்டுச் சென்ற புத்தகங்களை நீங்கள் கண்டுபிடிக்க முடியும். அவர்கள் நீண்ட நாட்களாகவே இலக்கியத்தின் மூலமாக தங்கள் செய்தியை பரப்புவதன் மதிப்பை உணர்ந்து விட்டார்கள், அதே நேரத்தில் நாம் அச்சடிக்கப்பட்ட பக்கங்களின் மதிப்பை உணராதிருக்கிறோம். நாம் விதைக்கவில்லையென்றால் அறுக்க முடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

உலக வேதாகமப் பள்ளி ஆசிரியராக சேர்ந்து கொள்ளுங்கள். வேத வசனங்களைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்ளுவீர்கள் கிறிஸ்தவனாக இருந்து கொண்டு மற்றவர்களிடம் நீ கற்றவைகளை பகிர்ந்து கொள்ளும்போது பத்து வருடங்களாக நீங்கள் உங்களுக்குத்தானே கற்றுக் கொண்ட காரியங்களைக் காட்டிலும் அதிகமாக நீங்கள் கற்றுக் கொள்ளுவீர்கள். அதை முயற்சி செய்து பாருங்கள்! சுவிசேஷத்தில் உங்களுக்கு இருக்கின்ற விருப்பம் அபரிதமாக அதிகரிக்கப்படுவதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவது மாத்திரமல்லாமல் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற ஆசையின் மூலமாக சத்தியத்தை கற்றுக்கொண்ட ஆத்துமாக்களுக்காக ஒவ்வொரு இரவும் நன்றி சொல்லிக்கொண்டு படுக்கைக்கு செல்வீர்கள்.

**BENNY MARTIN** **J.C. CHOATE**

பெண்கள் பகுதி

# கிறிஸ்துவின் சபைக்காக நான் என்ன செய்வேன்?

இன்றைக்கு அநேக கிறிஸ்தவப் பெண்கள் தேவனுடைய சபையில் தங்களுக்கென்று செய்வதற்கு எந்த ஒரு வேலையும் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். ஏனென்று கேட்டால் அனைத்து தலைமைப் பொறுப்புகளையும் ஆண்களே ஆக்கிரமித்துக் கொள்வதால், பெண்கள் ஆராதனை நேரங்களில் வெறுமனே வந்து அமர்ந்து விட்டு சென்றுவிடுவதாலேயே அவர்கள் பங்கு முடிந்து விடுகிறது என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

ஸ்திரீயானவள், எல்லாவற்றிலும், அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும் 1 தீமோ 2:11,12 அப்படியானால் நம்முடைய வேலை அத்தோடு முடிந்துவிடுகிறதா?.

இல்லை, உண்மையாகவே, தேவனை ஆராதிப்பது என்பது ஒரு கிறிஸ்தவனுக்கு கிடைக்கக் கூடிய மிகப்பெரிய சிலாக்கியம்.

இது அவன் செய்கின்ற வேலையோ அல்லது சேவையோ அல்ல. ஆராதனையில் கலந்துகொள்வதின் மூலமாக அவரைத் துதிக்கிறோம். ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக் கொள்கிறோம். சக கிறிஸ்தவர்களோடு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். ஆனால், நாம் தேவனுக்கென்று செய்கின்ற வேலை வாரம் முழுவதும் தொடர்ந்து செய்கின்ற ஒன்றாகும்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது, அன்றியும் என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது (பிலிப்பியர் 4:3) கெங்கிரேயா ஊர்ச் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக் கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன். அவள் அநேகருக்கும், எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 16:1,2,3).

மீண்டும் வசனம் 6-ல் எங்களுக்காக மிகவும் பிரயாசப் பட்ட மரியாளை வாழ்த்துங்கள், என்று பார்க்கிறோம். அப்போஸ்தலர் நடபடிகள் 16:14-15 வசனப்பகுதிகளில் லீதியாள் கிறிஸ்தவளாக மாறிய போது பவுலையும் அவனோடிருந்தவர்களையும் தங்கும்படி தன் வீட்டை அவர்களுக்குக் கொடுத்தாள். அப்போஸ்தலர் 18:26ல் ஆக்கில்லாவும், பிரிஸ் கில்லாளும் அப்பொல்லாவை தங்களோடு சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். அப்போஸ்தலர் 9:39ல் தொற்காள் என்ற கிறிஸ்தவப் பெண் தன்னை சுற்றி இருக்கும் விதவைகளுக்கு வஸ்திரங்களையும், அங்கிகளையும் தைத்து கொடுப்பதின் மூலம் அவர்களுக்கு உதவியாயிருந்தாள்.

மேலும் தீத்து 2:3-4 வசனங்களில் முதிர் வயதுள்ள ஸ்திரீகள், பாலிய ஸ்திரீகளுக்கு போதித்து புத்தி சொன்னார்கள் என்று அறிகிறோம். இளைஞனாகிய தீமோத்தேயு விசுவாசத்தில் உத்தம குமாரனாக வளர்வதற்கு அவன் பாட்டியாகிய லோவிசாலும் அவன் தாயாகிய ஐனிக்கேயாளும் காரணமாயிருந்தார்கள் என்று பார்க்கிறோம். மாற்கு 15:40,41 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கலிலேயாவிலிருந்த போது அவருக்குப்பின் சென்று ஊழியஞ் செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள் என்று நமக்கு தெரிவிக்கிறது.

மேற்கூறிய பல ஆதாரங்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ பெண்மணிகள் எவ்வளவு உற்சாகமாக செயல்பட்டார்கள் என்பதை நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. இதை வாசிக்கும் நாம் கூட தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால் உற்சாகமாய் செயல்பட ஆரம்பிப்போம்.

கர்த்தருடைய சபைக்கடுத்த காரியங்களில் ஒரு பெண் என்னென்ன செய்ய முடியும்? இதோ சில ஆலோசனைகள்.

1. முதலாவதாக நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் தவறாமல் ஆராதனையில் கலந்து கொள்கிறீர்களா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உங்கள் குழந்தைகளுக்கு வீட்டில் இருக்கும் போது ஆவிக்குரிய காரியங்களில் தக்க பயிற்சியை தவறாமல் அளிக்க வேண்டும்.

3. வாரத்தின் இடைப்பட்ட நாளில் பெண்களுக்கென்றும், குழந்தைகளுக்கென்றும் வகுப்புகள் நடத்த பழகிக் கொள்ள வேண்டும்.

4. கர்த்தருடைய பந்திக்கான பொருள்களை ஆயத்தப் படுத்து வதில் தானாக முன் வரவேண்டும்.

5. ஆராதனை முடிந்து கர்த்தருடைய பந்திக்கான பாத்திரங்களை கழுவி வைக்க வேண்டும்.

6. ஆராதனை முடிந்த சில நிமிடங்கள் பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து சபை கூடுமிடத்தை சரியாக வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

7. பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆற்ற வேண்டிய சில காரியங்கள் :-

**A.** வியாதியஸ்தர்களையும், ஆராதனைக்கு வராதவர்களையும் சந்திப்பது.

**B.** பெண்களுக்கென்று தனி வகுப்புகள் தவறாமல் நடத்து வது.

**C.** வியாதியாயிருக்கிற அயலகத்தார்க்கும் கூட சில உணவுப் பொருள்கள் அளிப்பது.

**D.** ஆராதனைக் கூடத்தை சுத்தம் செய்ய தனி நாளை ஒதுக்குதல்.

**E.** சபையின் ஐக்கிய விருந்துகளில் உணவு தயாரிப்பதில் உதவி செய்வது.

8. நண்பர்கள், அயலகத்தாரிடம் அன்பாகப் பேசி, ஏதாவது ஒரு நாள் காலையோ, மாலையோ உங்கள் இல்லத்திற்கு வரவ ழைத்து தேனீர் கொடுத்து அவர்களுக்கு வேதாகமத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும்.

9. சபைக்கு அருகாமையில் உள்ள வீடுகள், மற்றும் ஆர்வமுள்ள குடும்பங்களுக்கு உங்கள் கணவன்மார்களுடன் சென்று அங்கு வேதாகமத்தைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

10. பெண்களாகிய நாம் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு சரீரப் பிரகாரமாகவோ, ஆவிக்குரிய காரியங்களிலோ, அவர் களின் தேவைகளில் உதவி செய்ய எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறாக, பெண்களாகிய நாம் ஆற்ற வேண்டிய பணி ஏராளமாக உள்ளது. நம்முடைய சபையின் வளர்ச்சி அதிகமா கும். நாமும் விசுவாச வாழ்க்கையில் வளர ஏதுவாகும்.

**R.R. Nayagam.** **B.B. Choate**

## நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார்....

**தே**வனுக்கு மகிமையையும், உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன், நம்முடைய அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கிற மிகப்பெரிய காரியம் ஆசீர்வாதம். கர்த்தர் நம்மோடு கூட இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இதற்கு மாறாக நடக்கும் போது நாம் சோர்ந்துப் போய் விடுவோம். ஏனென்றால், நாம் எல்லோரும் தேவனிடம் இருந்து ஆசீர்வாதங்களையே எதிர் பார்த்து வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். சோதனையும், கஷ்டம் வரும்போது கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறாரா? என்ற கேள்வி நம்முடைய இருதயத்தில் தோன்றும்.

ஏன் இந்த கேள்வி?, பிரியமானவர்களே " *நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார்* " இந்த வார்த்தையை வேதாகமத்தில் யாருக்கு சொல்லப்பட்டதோ அந்த மனிதர் கூட சில துன்பங்களை அனுபவித்து இருக்கிறார். ஆனால், கர்த்தரை விட்டு விலக வில்லை. தேவனை பற்றிக் கொண்டு இருந்ததினால் அநேக ஆசீர்வாதங்களை கர்த்தர் கொடுத்தார். சாமதானம் இல்லாத நேரத்திலும் கர்த்தரை நம்பி இருந்தார். பலனை பெற்றுக் கொண்டார். நம்மை தேவன் ஆசீர்வதிக்கும் போது தேவனை ஆவென்று போற்றுகிறோம், பிரச்சனை, கஷ்டம் என்று வரும் போது என்ன தேவன் இவர், என்னோடு கூட இல்லையே என்று குறை சொல்லுகிறவர்களாக இருந்துகொண்டு இருக்கிறோம் " என் சகோதரரே இப்படியிருக்கலாகாது " (யாக். 3:11) நம்முடைய தேவன் சமீபத்திற்கு மாத்திரம் தேவன் அல்ல தூரத்திற்கும் அவர் தேவன் தான் (எரே. 23:23) நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்ட தேவ மனிதனை பற்றிப் பார்ப்போம், அவர் "ஈசாக்கு"

**I. நூறு மடங்கு பலன் அடைந்தவன் :**

ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். ஈசாக்கு பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் அந்த தேசத்தின் மக்கள் மிகவும் சந்தோஷமான நிலையில் இருக்கும் போது பெற்றுக்கொள்ளவில்லை (ஆதி. 26:1) அந்த தேசத்தில் பஞ்சம் உண்டாயிருந்தது. பஞ்சத்தின் பொருள் கேரார் மக்கள் எல்லாரும் கஷ்டப்பட்டு கொண்டு இருந்த நேரத்திலும்

விளைச்சல் இல்லாத காலத்திலும் வருத்தத்தோடு இருந்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தார். அத்தேசத்து மக்கள் ஏழ்மையிலும், விருத்தி இல்லாமையிலும், பெலன் இழந்துக் கொண்டிருந்த நேரத்தில் (ஆதி. 26:13) ஈசாக்கு ஐசுவரியவானாகி வரவர விருத்தியடைந்து, மகாபெரியவனா னான். கர்த்தர் ஒருவரோடுகூட இருக்கும் போது எந்த நிலையாக இருந்தாலும் கர்த்தர் அவர்களை உயர்த்துவார் என்பதை தான் ஈசாக்கு நமக்கு ஒரு பாடமாக இருக்கிறார் (நீதி. 10:22) கர்த்த ரின் ஆசீர்வாதமே ஐசுவரியம் தரும்.

ஈசாக்கோடு தேவன் இருந்ததிற்கு இன்னும் ஒரு காரணம் (ஆதி. 24:63) அவர் தேவனை தியானிக்கிறவனாகவும் இருந் தார். தேவனை தேடுகின்ற விஷயத்தில் ஈசாக்கு பங்கு மேலோங்கி இருந்தது. அதனால் தான் தேவனை நம்பி விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். நாமும் கூட தேவனை தேடு கின்ற காரியத்தில் சரியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஈசாக்கை பஞ்ச நேரத்தில் வழி நடத்தின தேவன் ஏன் நம்மை கஷ்டமான நேரத்தில் வழி நடத்தமாட்டாரா? நடத்துவார் (எபி. 11:1) தயவு கூர்ந்து வாசித்துப்பாருங்கள். நமக்கு உறுதியும், நிச்சயமுமாக இருக்கிறது. தேவன் மேல் உள்ள நம் விசுவாசம், நாமும் ஈசாக்கை போல நூறு மடங்கு பலன் அடைய தேவன் உதவி செய்வார்.

## II. அவ்விடம் விட்டுப் புறப்பட்டு

கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதிக்கையில் அந்த தேசத்தில் பஞ்சத்தை தழுவிக் கொண்டிருந்த மக்களுக்கு ஈசாக்கின் ஆசீர் வாதம் ஒரு மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. அதற்காக ஈசாக்கின் தேவன் உண்மையான தேவன் என்று தெரிந்து கொள்ள வில்லை. மாறாக, ஈசாக்கின் பேரில் பொறாமைக் கொண்டார்கள் (ஆதி.26:14) இதனால் ஈசாக்குக்கு தேவன் ஆசீர்வாதமும் கொடுத்தார். பிரச்சனையும் கொடுக்கிறார் என்று அவர் தேவனை துஷிக்கவில்லை, வந்த பிரச்சனையை ஒரு பொருட்டாக எண்ணா மல் பிரச்சனையை விட்டு விலகி செல்கிறார். கர்த்த தன்னோடு கூட இருக்கிறார் என்று நினைத்து அவைகளை சகித்துக் கொள் கிறார். பிறகும் ஆசீர்வாதம் (ஆதி. 26:19) "*நீரூற்றைக் கண்டார் கள்*" தேவனை எந்த சூழ்நிலையிலும் பற்றிக் கொண்டு இருந்தால் எப்படியும் வழி நடத்துவார் என்பதைத்தான் ஈசாக்கு வெளிப்ப டுத்துகிறார்.

பிரியமானவர்களே நம்மை கூட ஈசாக்கை போல மிக பெரிய ஆசீர்வாதம் கொடுத்திருக்கிறார். நூறு மடங்கு பலன் அடைகிறோம், ஐசுவரியவான்களாக மாற்றுகிறார், விருத்தியடையச் செய்கிறார், பெலிஸ்தரைபோல் பிரச்சினைகள் வரும் போது ஏன் நாம் ஈசாக்கை போல இருக்கக் கூடாது? ஏன் சகித்துக் கொள்ள கூடாது? தேவன் நமக்கு கொடுத்து இருக்கிறார். கிறிஸ்து பாடுகள், சிலுவை, மரணம், இவைகளை ஏற்று சகித்து கொண்டு இருக்கும் போது, நாம் ஏன் துன்பத்தை " கஷ்டம் " ஏற்று கொள்ள தயக்கம் காட்டுகிறோம். கிறிஸ்து உங்களுக்காக செய்த காரியத்தை நினைத்துப்பாருங்கள். அவைகளை விட உங்கள் காரியம் பெரியவைகளா? *யாக். 1:12* பாக்கியவான்.

அன்பானவர்களே நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று ஈசாக்குக்கு சொன்னது யார் தெரியுமா? அவனுக்கு *பிரச்சனை உண்டு பண்ணினவர்கள் " எதிரிகள் "* இவர்கள் சொல்லும் அளவிற்கு கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்து இருக்கிறார். ஈசாக்கை ஆசீர்வதித்த தேவன் ஏன் நம்மை ஆசீர்வதிக்கமாட்டாரா? நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார். இந்த வார்த்தை நமக்கும் பொருந்தும் என்று நம்புகிறேன் தேவன் துணை நிற்பார் ஆமென்.


**P.M. சம்மா**

## சிந்தனைக்கு

**எ**ன் தேவனே, என்னிலுள்ள முள்ளுக்காக நான் ஒருபோதும் உமக்கு நன்றி சொல்லவில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட ரோஜாக்களுக்காக ஆயிரம் முறை நன்றி சொல்லி இருக்கிறேன். ஆனால், முள்ளுக்காக ஒரு முறை கூட நன்றி சொல்லவில்லை. என்னுடைய சிலுவைக்கான வெகுமதியைப் பெற்றுக் கொள்ளும்படியான உலகத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டுள்ளேன். ஆனால், சிலுவை எனக்கான இப்போதைய மகிமை என்பதை நான் ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

என் சிலுவையின் மகிமையை எனக்குப் போதியும், என்னுடைய முள்ளின் மேன்மையை எனக்குப் போதியும் வேதனையின் வழியிலே உம்மிடத்தில் ஏறி வரும்படியாக எனக்குக் காட்டும். என்னுடைய வானவில்லை என்னுடைய கண்ணீர் உண்டு பண்ணியது என்று எனக்குக் காட்டும்.

# தலை - கனமான பறவை!!



எனக்குப் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிதான வாழ்த்துக்கள். மாதந்தோறும் வெளிவரும் பாடங்களும், செய்திகளும் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்த மாதம் மரங்கொத்தி பறவையிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளப்போகிறோம்.

சரி, முதலாவது அது ஏன் மரத்தின் கிளை மீது உட்காராமல், மரத்தின் பக்கவாட்டில் அமர்ந்து கொள்ளும்? என்று பார்ப்போம். மரத்திற்கு உள்ளாக சில பூச்சிகள் உயிர்வாழ்கின்றன. அதை உணவாக கொள்ளும்படியாக மரத்தில் உட்கார்ந்து ஒரு நிமிடத்திற்கு 100 முறை அதை கொத்துகிறது.


இந்த பறவைக்கு அநேக தனித்த குணங்கள் இருக்கின்றன. இதை வைத்துத்தான் அந்த கடினமான முயற்சியோடு மரத்திற்கு உள் இருக்கும் பூச்சிகளை உட்கொள்கிறது.

முதலில், அவைகளின் கால்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. அவைகளின் முன் இரண்டு விரல்களும் பின் இரண்டு விரல்களும் பிரிந்து இருக்கும். இதனால்தான் மரத்தின் பக்கவாட்டில் அவை எளிதாக அமர்ந்து கொள்கின்றன.

அடுத்தது, அதன் மூக்கும், தலையும், கழுத்தும் மரத்தை கொத்துவதற்கு ஏதுவாக அமைந்திருக்கிறது. அதன் கழுத்து மிகவும் வலிமை வாய்ந்தது. அதன் மண்டை ஓடு மற்ற பறவைகளை காட்டிலும் உறுதியானது.

அதன் மூக்கிற்கும், மண்டை ஓட்டிற்கும் இடைய பஞ்சு போன்ற சில சதைகள் இருப்பது, அவைகள் மரத்தை சுலபமாக கொத்த உதவுகிறது.

அடுத்தது அதின் நாக்கு, மரத்தை ஓட்டை போட்ட பிறகு, நீளமான நாக்கை ஓட்டையின் உள்ளே சுழற்றி பூச்சிகளை



உட்கொள்கிறது. அதன் நுனி சற்று பசை தன்மையுடையது. அதினால் பூச்சிகள் எளிதாக ஒட்டிக் கொள்ளும்.

பாருங்கள் தேவனுடைய படைப்பை. இப்படியாக அவர் சிருஷ்டித்த ஒவ்வொன்றிலும் அவர் வல்லமையை, மகத்துவத்தை அவருடைய ஞானத்தை நாம் உணர முடியும்.

இப்படிப்பட்ட தேவனைத் தான் நீங்களும் நானும் தேவனாக கொண்டிருக்கிறோம். ஆக இப்படிப் பட்ட தேவனுக்கு பயந்து வாழ்வது எவ்வளவு அவசியம்.

நீங்கள் பயந்து நடப்பீர்களா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!.

**Abel R. Nayagam.**

நம்பிக்கை என்னும் ஒரு வேலியை
இன்றைக்கு சுற்றிலும் கட்டி;
அந்த இடத்தை அன்பின் கிரியைகளால் நிரப்பி,
பிறகு அங்கே தங்கியிரு,
பாதுகாப்பளிக்கும் வேலியின் ஊடே
நாளைய தினத்தைப் பார்க்காதே;
மகிழ்ச்சியானாலும், துக்கமானாலும் தாங்கும்
பெலனை தேவன் கொடுத்து உதவுவார்.

– மேரி ப்ரான்ஸ் பட்

# ஓநாய்களை அடையாளம் கண்டுகொள்வதும், எதிர்ப்பதும்

இயேசு தன்னுடைய ஆடுகளை ஆபத்திற்குள்ளாக்கின ஓநாய்களை எச்சரித்தார். பவுல் இந்த எச்சரிப்பை மறுபடியும் சொன்னார். இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பின்பற்றுவதற்கு இந்த ஓநாய்களை அடையாளம் கண்டு கொள்வது அவசியம். இந்த காரியத்தில் சில உண்மைகளை நாம் கருத்தில் கொள்வோம் (அப். 20:29-31).

முதலாவது, கர்த்தருடைய வார்த்தைப்படி கள்ள உபதேசத்தை போதிக்கிற, செயல்படுத்துகிற எல்லோருமே ஓநாய்கள் அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சிலர் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள். அப்பொல்லோவைப் போல இவர்கள் திருத்தப்பட வேண்டும் (அப். 18:24-26). அவர்களுடைய உண்மைத் தன்மையும், நல்நோக்கங்களும் அவர்களுடைய தவறான எண்ணங்களை வேதாகம உண்மையாக மாற்றாது.

அடுத்ததாக, உண்மையான ஓநாய்கள் ஆடுகளைப் போல தோற்றமளிப்பார்கள் என்கின்ற உண்மையை நாம் எதிர்கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுடைய உண்மையான தோற்றத்தை அடையாளம் காட்டமாட்டார்கள். அவர்களுடைய உள்நோக்கங்கள் எல்லாம் வஞ்சனை நிறைந்ததாய் காணப்படும், அவர்கள் வேடதாரிகளாயிருப்பார்கள் அல்லது அவர்களது உள் நோக்கங்கள் ஜாக்கிரதையாக மறைக்கப்பட்டிருக்கும். பொதுவாக, இந்த கொள்ளையர்களை எதிர்கொள்வதில், எதிர்ப்பதில் நாம் என்ன செய்ய முடியும்?.

முதலில் நாம் அவர்களை வசனங்களைக் கொண்டு சோதித்தறிய முடியும், விசேஷமாக அவர்கள் எவைகளைப் போதிக்கிறார்கள், எவைகளை ஆதரிக்கிறார்கள் என்பதை சோதித்தறிய முடியும். ஓர் ஓநாய் தன்னுடைய நோக்கம் நிறைவேற்றும்படி சத்தியத்தை புரட்டுவான் (2பேதுரு 3:16), எனவே எச்சரிப்பு ஆலோசனையாக கொடுக்கப்படுகிறது.

அதன்பின்பு, அதிகார ஆசை, மற்றவர்களை தன்னுடைய கட்டுபாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற ஆசை போன்ற அறிகுறிகளை வைத்து நாம் விழிப்படைய முடியும். தியோத்திரேப்பு தன்னைப்போன்று குணமுடையவர்களில் கடைசியானவன் அல்ல (III யோவான் 9).

கடைசியாக, ஒருவர் தன்னுடைய ஜீவியத்தில் கொடுக்கிற கனிகளை நாம் கவனிக்க முடியும். தீமையான வழிகள் உடனோ அல்லது பின்போ தீமையான கனிகளைக் கொடுக்கும் (மத்தேயு 7:15-20).

**ARDRON HINTON** **BENNY MARTIN**

# ஆராதனையில் கலந்து கொள்ளுவது அல்லது சபை கூடி வருவது அவ்வளவு முக்கியமானதா?

**வே**தாகமப் பார்வையில் " ஆராதனையில் கலந்து கொள்ளுவது ஒரு கிறிஸ்தவருக்கு அவ்வளவு முக்கியமான ஒன்றா? " என்பதை இந்த கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம். இதற்கு ஆதாரமாக எபிரெயர் 10 ஆம் அதிகாரம் 23 முதல் 32 வரை உள்ள வசனங்களை எடுத்துக்கொள்வோம்.

23வது வசனத்தில் " *நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்* " என்று கூறப்பெற்றுள்ளது. நாம் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கிய போது " *இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன்* " என்று நாம் செய்த விசுவாச அறிக்கையைத் தொடர்ந்து அப்போஸ்தலர் 2:42-ல் கூறியுள்ள விதமாக "*அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்* " என்ற நிலையில், நம்முடைய கிறிஸ்தவ விசுவாச வாழ்வு அமைந்திருக்க வேண்டும். ஆனால், இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் பலர் தொடக்க காலத்தில் கிறிஸ்துவின் மேல் வைத்திருந்த அன்பை சிறிது சிறிதாக குறைத்து சபை கூடி வருதலை விட்டு விடுகின்றனர். இப்படிபட்டவர்களை அப்போஸ்தலராகிய பவுல், கலாத்திய நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அதிகாரம் 3:1-4 வசனங்களில் " *ஆவியிலே தொடங்கின நீங்கள் இப்பொழுது மாம்சத்திலே முடிக்கப் போகிறீர்களா?* " என்று அங்கலாய்ப்புடன் கேட்கிறார்.

" *சபை கூடி வருவது* " என்பது, நாம் தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி (அப். 20:7) கூடிவருவது. இதில் நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறவும், நமது தேவைகளை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தவும், (பிலி.4:6), துதிகளினாலும் ஸ்தோத்திரத்தினாலும் தேவனைப் புகழ்ந்து நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து பாடி கீர்த்தனம் பண்ணவும், தேவ குமாரனாகிய நமது மீட்பர் கிறிஸ்து, நமக்கு ஏற்படுத்தின (மத். 26:26-29; மாற்கு. 14:2; லூக். 22:14-22; 1கொரி 11:23-29) *புது உடன்படிக்கையை*, அவரது தியாகத்தை நன்றியுடன் நினைவுகூர்ந்து, அவரது சரீரத்திற்கு அடையாளமாக அப்பத்தை

உண்டு, அவரது மாசற்ற பரிசுத்த இரத்தத்திற்கு மாதிரியாக உள்ள திராட்சை ரசத்தை பருகி, சபையாரோடு அன்புடன் ஐக்கியமாகி, பரிசுத்தவான்களின் தேவைக்கென்று நமக்கு கொடுக்கப்பட்ட கட்டளையின்படி, வாரத்தின் முதல் நாளாகிய சபை கூடிவரும் நாளிலே, நமது காணிக்கையை உதாரத்துவத்துடன் படைத்து, அதன் மூலம் நாம் தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவது சாதாரண மான ஒன்றா? அப்போஸ்தலர் *பவுல்* கொலோசேப்பட்டினத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதிய திருமடலில், அதிகாரம் 1, வசனம் 21,22ல் சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். ஒரு கிறிஸ்தவர் விசுவாசத்தில் அசைவு ஏற்பட கொஞ்சம் அலட்சிய மாக இருந்தால் போதும், யாரை விழுங்கலாமோ என்று சுற்றித் திரியும் எதிரியான பிசாசு வகையாய் அவரை பயன்படுத்திக் கொள்வான் (1பேதுரு 5:8).

**கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருத்தல் வேண்டும்:**

நமக்காக தமது சொந்தக் குமாரனை, சபிக்கப்பட்ட சிலுவை மரத்திலே தியாக பலியாக ஒப்புக்கொடுத்து, அவரது அந்த தியாகத்தின் மூலமாக நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை உண்டு பண்ணிய நமது பரலோகப் பிதாவிற்கு நாம் நன்றியுள்ள வர்களாக நமது வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தவில்லை என்றால், நமது கிறிஸ்தவ வாழ்வானது கேலிக்குரிய ஒன்றாகி விடாதா? ஆராதனையில் தொடர்ந்து கலந்து கொள்ளுவது நமது விசுவாசத்தை பலப்படுத்தும். வெளிப்படுத்தின விசேஷம் 2 ஆம் அதிகாரம் 10ம் வசனத்தில் “ *நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்* ” என்று சொன்ன ஆண்டவராகிய கிறிஸ்து, நாம் அவருடைய எதிர்பார்ப் பின்படி இல்லாவிடில் எப்படி அதை நமக்குத் தருவார்?. அப்படி யானால், நாம் தொடங்கிய அந்த விசுவாச ஓட்டத்தினால் என்ன பயன்?

எபிரெய எழுத்தாளர் தனது கடிதத்தின் 12ஆம் அதிகாரம் முதல் வசனத்தில், “ *ஆகையால் மேகம் போன்ற (11-ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விசுவாச வீரர்களைப் போன்ற) இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்*” என்று எழுதியுள்ளார். எனவே, ஒரு கிறிஸ்தவர் ஓட்டத்தை தொடங்குவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அதை தொடர்ந்து ஓடி முடிப்பதும். இல்லாவிடில் தொடங்கிய ஓட்டத்தினால் பயன் என்ன?.

இந்த கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கும் ஐக்யத்திற்கும் நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1கொரி 1:9). அவர் எதையெல்லாம் நமக்குத் தருவேன் என்று வாக்கு கொடுத்தாரோ அதையெல்லாம் செய்து நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவர் (1தெச. 5:24). ஆசீர்வாதங்களைப் பெற நம்மிடத்திலும் உண்மை காணப்பட வேண்டுமல்லவா? நம்முடைய உத்தமம் தொடர்ந்து அவரை ஆராதிப்பதில் அல்லவா வெளிப்படுகிறது?.

எபிரெயர் 10:25ல் கூறப்பெற்றுள்ள, " *சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லக்கடவோம்* " என்கிற வசனம் அப்படி புரிந்துக் கொள்ள முடியாத ஒரு சிக்கலான வசனமா? இவ்வளவு எளிதில் புரிந்துக் கொள்ளக் கூடிய ஒரு வசனத்தை எப்படி ஒருவரால் அலட்சியப்படுத்த முடியும்? அப்படி அலட்சியப்படுத்தக் கூடியவர்கள் எப்படி தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ள அல்லது தங்களைத் தாங்களே நினைத்துக் கொள்ள முடியும்?

அப்போஸ்தலராகிய பவுல் ரோமபுரியிலுள்ள கிறிஸ்துவின் சபைக்கு எழுதிய நிருபத்தில், 6ஆம் அதிகாரம் (3-5) 4ஆம் வசனத்தில் " *நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு* " என்று எழுதியிருக்கிறார். ஒருவரில் புதிதான ஜீவன் இல்லாவிடில் அவர் எப்படி இருப்பார்? செத்தவராக அல்லவா இருப்பார்? கிறிஸ்துவோடு கூட நமது ஐக்கியம் தொடர்ந்து இருக்குமானால் நாமும் அவரைப் போலவே ஜீவனுள்ளவர்களாக இருப்போம் (II கொரி. 5:17).

**சபை கூடிவராவிடில் என்ன நடந்துவிடும்?**

1. நாம் தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதிக்கிறவர்களாக இருப்போம். (வசனம் எபி. 10:29). (மத். 7:6-யும் வாசியுங்கள்.)
2. நம்மை பரிசுத்தம் செய்ய சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணுகிறவர்களாக இருப்போம். (வசனம் எபி. 10:29) இது எவ்வளவு கொடூரமான ஒரு செயல்.
3. கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்களாக இருப்போம். (வசனம் எபி. 10:29)

இப்படிப்பட்டவர்கள் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதை யோசித்துப்பாருங்கள் என்று எபிரெய நிருப ஆசிரியர் நமக்கு எச்சரிக்கை கொடுக்கிறார்.

**இப்படி சபை கூடி வருதலை விட்டுவிடுகிறவர்களுக்கு என்ன நடக்கும்?**

1. எபிரெயர் 10:26-ல் சொல்லப்பட்டுள்ளபடி இவர்களுக்கு *பாவ விமோசனம்* கிடைக்க இனி வேறொரு பலியும் இல்லை வழியும் இல்லை (அப். 4:12, லூக். 19:10). யோவான் 14:6) ஆக இவர்கள் நரகத்திற்கென்று நிச்சயக்கப்படுவது உறுதி. ஏனென்றால், பாவத்தை சுமந்த தேவாட்டுக் குட்டியானவர் இயேசு கிறிஸ்து ஒருவரே.

2. இவர்கள் *ஜீவ கிரீடத்தை* எதிர்பார்க்ககூடாமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்கிறவர்களாக இருப்பார்கள். வசனம் (எபி. 10:27)

3. இப்படிப்பட்டவர்கள் மோசேயின் நியாயப் பிரமாண காலங்களில் ஓய்வு நாள் கட்டளைக்கு கீழ்ப்படியாதவர்கள் கல்லெறியுணடு மரித்ததை விட மோசமான மரணத்திற்கு (ஆவிக்குரிய மரணம்) உட்பட்டவர்களாக இருப்பார்கள். வசனம் எபி. 10:28, யாத்.31:14).

4. இவர்களை தேவன் நியாயத்தீர்ப்பு நாளிலே பழிவாங்குவார். (எபி. 10:30) நமது தேவன் மிகுந்த அன்புள்ளவர். தமது அன்பின் குமாரனை நமக்காக இந்த உலகிற்கு அனுப்பி நமக்கு மீட்பை ஏற்படுத்தினார். இந்த அன்பின் தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு இரங்குகிறவராகவும் கீழ்ப்படியாதவர்களை நீதியாய் நியாயம் செய்கிறவராகவும் இருக்கிறார். (எபே. 5:6, கொலோசெயர் 3:6) ***கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும்.***

5. *ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாகயிருக்குமே* என்று வேத வசனம் நம்மை மீண்டும் எச்சரிக்கிறது. (எபி. 10:31).

தமக்கு கீழ்ப்படிகிற மக்களுக்கென்று சிறப்பான இடத்தை ஒழுங்கு செய்து காத்திருக்கிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன், கீழ்ப்படியாதவர்கள் மீது எவ்வளவு எரிச்சல் உள்ளவராக இருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம். ஆம், சபை கூடி வருதலை அலட்சியப்படுத்தி அதை விட்டு விடுதல் இவ்வளவு கொடிய விளைவுகளை ஏற்ப்படுத்தும் என்று நாம் எப்போதாவது சிந்தித்துள்ளோமா?.

**சபை கூடுவதை புறக்கணிக்கும் காரணங்கள் என்று சிலரால் கூறப்படுபவை எவை?**

1. சில நாடுகளில் அல்லது சில இடங்களில் கிறிஸ்தவர்கள் கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் ஆளாகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் சபை கூடுதலில் கலந்து கொள்ள

இயலாமல் சிலர் அஞ்சி அதை விட்டு விடுகின்றனர். ஆனால், அதே இடங்களில் சில வைராக்கியமுள்ள விசுவாசிகள் குகைகளிலும், மறைவான இடங்களிலும் கூடி அப்பம் பிட்டு ஆராதித்து தங்களது விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுகிறார் கள்.

2. சிலர் அலட்சியப்போக்கால் இதை விட்டு விடுகின்றனர். ஏதோ ஒருநாளில் ஞானஸ்நானம் பெற்றோம் - மீட்பை பெற் றோம் சரி தொடர்ந்து ஆராதனைகளில் கலந்து கொள்ளா விடில் என்ன குடியா மூழ்கிவிடும்? என்று எண்ணி தனக்காக கொடூர சிலுவையில் தாங்கொண்ணா வேதனைப்பட்டு ஜீவனைத் தந்து சிந்திய தூய ரத்தத்தால் நமக்கு மீட்பை சம்பாதித்து கொடுத்த தேவ குமாரனை அலட்சியம் செய்கி றார்கள் என்பதைத் தவிர வேறென்ன காரணம் கூட முடியும்? இது முற்றிலும் அலட்சியத்தால் நடைபெறுகிறது. தேவன் தன்னை பரிகாசம் செய்ய அனுமதிக்கமாட்டார் (கலா. 6:7).

3. ஒரு சிலர் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து சென்றுவிட்டன, இப்பொழுது சபை கூடிவரும் அந்தக்கட்டளைக்கு கீழ்ப்படி யாமல் போனால் என்ன? என்று சொல்லி தங்களைத் தாங் களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திராவிடில் என்னவரும் என்பதை நமக்கு இந்தச் கட்டுரையில் முன்பே சொல்லப்பட்டுள்ளது. எனவே, எவ்வளவு காலங்களானாலும் சொல்லப்பட்ட கட்டளைகள் மாறுவதில்லை. வசனங்கள் நம்மை நியாயம் தீர்க்கும் என்பதை நாம் மறந்துவிடலாகாது. (யோவா 12:48).

4. சில " *நல்ல சகோதரிகள்* " சபை கூடிவரும் வாரத்தின் முதல் நாட்களில் சபை கூடிவருதலை தவிர்த்து, தங்களுடைய நண்பர்களுக்கு வித விதமான விருந்துகளைப் படைத்து உபசரித்து மகிழ்வதை பழக்கமாகக் கொண்டுள்ளனர். எனக்குத் தெரிந்த ஒரு " *நல்ல சகோதரர்* " இந்த நாட்களில் தனது மாணவர்களின் இல்லங்களில் நடைபெறும் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்று விடுவார். ஆண்டிற்கு ஒரு முறை அல்லது இருமுறை சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுவார். மேலும் சில நல்ல சகோதரர்கள் இந்த கர்த்த ருடைய நாளில் சபை கூடிவருதலை தவிர்த்து விட்டு தங்கள தொழில் அபிவிருத்திக்கான முயற்சிகளில் அல்லது தங்களது அலுவலக வேலைகளில் நேரத்தை செலவிடுகின்றனர். (I யோவான் 2:5).

5. இன்னும் சில நல்ல கிறிஸ்தவர்கள் ஆராதனை நடைபெறும் இடம் தங்களுக்கு வெகு அருகாமையில் இல்லை, நாங்கள் எங்கள் வீடுகளிலேயே ஆராதித்துக் கொள்ளுகிறோம் என்று கூறி சபை கூடி வருதலை தவிர்த்து வசதிக்கேற்றபடி, இவர்கள் சில நாட்கள் மட்டும் தங்கள் வீடுகளில் ஆராதிக்கின்றனர். இவர்கள் தங்கள் தேவைகளுக்காக எவ்வளவு தூரம் இருந்தாலும் அவ்விடங்களுக்குச் செல்வார்கள். இவர்கள் இம்மைக்காக மட்டும் கிறிஸ்துவின் மேல் பற்றுள்ளவர்கள் (1கொரி. 15:19).

**ஒரு சகோதரனுடைய நல்ல முன் மாதிரியை நோக்கிடுங்கள்:**

அமெரிக்க அதிபராக ஒபாமா பாராக் இப்பொழுது பொறுப் பேற்றுக் கொண்டதைப் போல, 1881 ஆம் ஆண்டு மார்ச் -4ம் தேதி ஜேம்ஸ் கார்பீல்ட் என்ற சகோதரர் அமெரிக்க தேசத்து அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார் அவர் பொறுப்பேற்றுக் கொண்ட முதல் வாரத்தின் முதல் நாளில் (கர்த்தருடைய நாளில்) அவரது அமைச்சர் அவையில் இருந்த ஒருவர், தேசத்தை அச்சுறுத்தக் கூடிய ஒரு மிக நெருக்கடியான பிரச்சனை குறித்துப் பேச ஒரு கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள வேண்டும் என அமெரிக்க அதிபரான அந்த சகோதரரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆனால், சகோதரர் ஜேம்ஸ் அதில் தன்னால் கலந்து கொள்ள இயலாது என்று கூறி அந்த கூட்டத்தில் கலந்து கொள்வதை தவிர்த்தார். திரும்பத் திரும்ப அந்த அமைச்சரவை உறுப்பினர் அந்தக் கூட்டம் மிக முக்கியமானதெனவும் அதை தவிர்க்க இயலாது என்று கூறியும், தன்னால் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்றும் அதை விட முக்கியமான வேலை இருக்கிறது என்றும் கூறிய அந்த சகோதரர் ஜேம்ஸ், இன்று கர்த்தருடைய நாள், நான் சபைக்குப் போக வேண்டும் என் ஆண்டவர் எனக்காக காத்திருப்பார் என்று இன்றளவும் விசுவாசத்தின் தகப்பன் என்று போற்றப்படுவதைப் போல இந்த அமெரிக்க சகோதரரும் நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார் அல்லவா?.

நமது தேவனை அவர் விருப்பத்தின்படி வேதாகமத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதத்தில் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுவதற்காகவே சபையாகக் கூடி வருகிறோம். இந்த மிக முக்கியமானதொரு விஷயத்தில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டியுள்ளது? ஒருவேளை நாம் இவ்விஷயத்தில் இதுவரை சரியானபடி செயல்படாமல் இருந்திருந்தால் இனி எச்சரிக்கையுடன் நடந்து விசுவாசத்தை உறுதியாகக் காத்துக்கொண்டு மரணபரியந்தம் உண்மையாக இருப்போம், ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம்.

- சகோ. ஜான் சுவார்ட்ஸ், தஞ்சாவூர்.

## பாடம் - 6. சுவிசேஷத்தின் வெற்றி

அன்பான வாசகர்களே, மீண்டுமாக இந்தப் பாடத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் கடந்த பாடங்களில் பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது சாத்தானால் பல தடைகள் வந்தன. இரண்டாம் சுவிசேஷ பிரயாணத்தின்போது சுவிசேஷத்திற்கான கதவுகளை தேவன் திறந்தருளினார் என்று அறிந்து கொண்டோம். இந்த மூன்றாம் சுவிசேஷப் பயணத்தின் போது சுவிசேஷத்தின் வெற்றியைக் குறித்துப் படிப்போம்.

பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பிரயாணமனாது அப்போஸ்தலர் 18:23 ஆம் வசனத்தில் துவங்கி அப். 21:15ம் வசனங்கள் வரை முடிவடைகின்றது. சுவிசேஷமானது சாத்தா னின் அதிகாரங்களையெல்லாம் முறியடித்து அவனுக்கு மரண அடிக்கொடுக்கும் வல்லமையுள்ளது. எனவே தான், சுவிசேஷத் தின் ஆரம்ப காலத்திலிருந்தே சாத்தான் சுவிசேஷத்திற்கு பல இன்னல்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறான். அப்படிப்பட்ட இன்னல்களைத் தாண்டி சுவிசேஷமானது வெற்றிகளைப் பெற்று வருகின்றன. அந்த வெற்றிகளாவன!

### I. அசுத்த ஆவியின் மீது வெற்றி

முதல் நூற்றாண்டில் அசுத்தாவி பிடித்தவர்கள் சர்வசாதார ணமாக இருந்தனர். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் நாட்களில் இப்படிப்பட்டவர்கள் அதிகமாக இருந்தனர். உதாரணமாக மாற்கு 5:1-20ல் அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனிதனைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. அவனுடைய குடியிருப்பு கல்லறை களிலே இருந்தது. அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனும் கூடாதிருந்தது. ஏனெனில், அவன் சங்கிலிகளையும், விலங்கு களையும் முறித்துவிடுவான் அவன் எப்பொழுதும் இரவும், பகலும் கூக்குரலிட்டு கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுகிறவனாயிருந்தான். இயேசு அவனை நோக்கி அசுத்த ஆவியே இந்த மனுஷனை விட்டுப் போ என்று சொன்ன வுடன் அசுத்த ஆவி உடனே அவனை விட்டுப் புறப்போய் பன்றி களுக்குள் போயின பன்றிகள் உடனே ஓடி கடலிலே பாய்ந்து கடலில் அமிழ்ந்து மாண்டது. இப்படிப்பட்ட அசுத்த ஆவிகள் இயேசுவினால் துரத்தப்பட்டது. இதனால்

அசுத்த ஆவி பிடித்தவர்கள் குறைய ஆரம்பித்தனர். இயேசு சிலுவையிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்ததின் மூலமாக இயேசு சாத்தானை வென்றார் (எபி. 2:14). பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1யோவான் 3:8) எனவே முதலாம் நூற்றாண்டில் அசுத்த ஆவிகளின் ஆதிக்கம் குறைந்தது. அசுத்த ஆவிகள் சுவிசேஷத்தினாலே கட்டப்பட்டு விட்டன. சாத்தானைக் கிறிஸ்து தமது வல்லமையிலே ஜெயித்தார். அவனைக் கட்டிப்போட்டார் ஆதலால், அவன் இனி யாருக்குள்ளும் புகுந்துகொள்ள முடியாது. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலே யாராகிலும் மாற்கு 5ல் வாசிக்கப்பட்டபடி அசுத்த ஆவிப்பிடித்தவர்கள் இருக்கிறார்களா! என்பதை சிந்தித்துப்பாருங்கள்!.

அசுத்த ஆவிகளின் மீது இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரம் இருந்தது போல அப்போஸ்தலர்களுக்கு அந்த அதிகாரம் இயேசு கொடுத்திருந்தார் (மாற்கு 16:15-20) அதே அதிகாரம் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இருந்தபடியால் அவர் பொல்லாத ஆவிகளைத் துரத்தினார். (அப். 19:12) பவுல் தனது மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தில் கலாத்திய நாடு, பிரிகியா நாடு என்று சுற்றித் திரிந்து எபேசு பட்டணத்திற்கு வந்தார். அவர் அங்கே அற்புதங்கள் அடையாளங்களைச் செய்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். பவுல் அங்கே தங்கி ஊழியம் செய்து வந்தார் (அப். 19:9-11). பவுலுக்கு அசுத்த ஆவிகளின் மீது அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அசுத்த ஆவிகள் பவுலுடைய உருமால்களையும், கச்சைகளையும் கண்டு பயந்து ஓடின. அப்பொழுது யூதரில் சிலர் மந்திரவாதிகளாயிருந்தபடியால் அவர்களும் பவுலைப் போல இயேசுவின் நாமத்தைச் சொல்லி அசுத்தாவிகளைத் துரத்த முற்பட்டனர். ஆனால், அந்தப் பொல்லாத ஆவி அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன். நீங்கள் யார் என்னை துரத்த என்று சொல்லி மந்திரவாதிகளான யூதர்களைப் பார்த்து பலாத்காரம் பண்ணி அவர்களை நிர்வாணமாக்கி காயப்படுத்தியது. அவர்கள் பயந்து ஓடிவிட்டனர் (அப். 19:13-17) இந்த நிகழ்ச்சியின் மூலமாக இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது என்று வசனம் கூறுகிறது. அதாவது அசுத்த ஆவியின் மேல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தவிர வேறு எந்த காரியத்தினாலும் அதிகாரம் செய்ய முடியாது என்று காண்கிறோம்.

இன்று அசுத்த ஆவிகள் கள்ள உபதேசத்தினால் மட்டுமே இருக்கிறது. அன்றைய நாட்களில் இருந்தது போல இப்பொழுது இல்லை. அப்படியிருந்தால் அதைத் துரத்துவதற்கு அற்புதம் அடையாளம் செய்யும் வல்லமை வேண்டும். அது இப்பொழுது யாருக்கும் கொடுக்கப்படவில்லை. அது முதல் நூற்றாண்டில் வேத வசனங்கள் எல்லாம் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்டு முடியும் வரை இருந்தது (1கொரி. 13:8-10) இப்பொழுது வேத வசனத்தை தேவன் முக்கியப்படுத்தி

விட்டார். கிறிஸ்துவின் சுவிசேஷம் வல்லமையுள்ளதாக கொடுக்கப்பட்டுள்ளது (ரோ. 1:16) கிறிஸ்துவின் சுவிசேஷம் பிசாசின் தந்திரங்களையும் அசுத்த ஆவியின் உபதேசத்தையும் முறியடித்து வெற்றியைப் பெறும்படியாக உள்ளது (எபே 6:11-18)

## II. பயமுறுத்தலின் மீது வெற்றி

அப்போஸ்தலனாகிய பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பிராயணத்தில் நாம் கற்றுக்கொள்ளும் அடுத்த பாடம் பயமுறுத்தலின் மீது வெற்றி என்பதாகும். பவுல் எபேசு பட்டணத்தை விட்டு மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டார். அந்த திசைகளில் சுற்றித் திரிந்து சுவிசேஷத்தை அறிவித்து விட்டு மீண்டுமாக எபேசு பட்டணத்தின் வழியாக வருவதற்கு மிலேத்து பட்டணத்துக்கு வந்தார். அப்பொழுது எபேசுக்கு ஆள் அனுப்பி சபையின் மூப்பர்களை வரவழைத்து புத்திமதிகளைக் கூறினார். அப்பொழுதுதான் இந்த பயமுறுத்தல்களைக் கூறினார். தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிப்பதை குறித்தும் நான் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன் இப்பொழுது ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன் கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறது என்று பரிசுத்தாவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன் ஆயினும் அவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படேன் என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன் என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும் தேவனுடைய கிருபையில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்று பவுலடியார் கூறுவதைக் கவனியுங்கள்.

அருமையானவர்களே இன்று நமக்கு கட்டுகளும், உபத்திரவங்களும் பட்டணங்கள் தோறும் வந்து நம்மை பயமுறுத்துகின்றதா? நாம் ஒன்றுமில்லாத காரியங்களுக்கெல்லாம் பயந்து விடுகிறோம். இதனால் ஆராதனையை விட்டுவிடுகிறோம் சுவிசேஷத்தை சொல்லுவதை நிறுத்தி விடுகிறோம். உதவி செய்வதை நிறுத்திவிடுகிறோம். இப்படிப்பட்ட பயமானது நரகத்திற்கு வழி நடத்துவதாக இருக்கின்றது (வெளி. 21:8). உண்மையிலேயே நமக்கு அரசாங்கத்தின் மூலமாகவோ, கள்ளப்போதகர்கள் மூலமாகவோ அல்லது கள்ள சகோதரர்கள் மூலமாகவோ பயமுறுத்தல்கள் வந்தால் அவைகளையெல்லாம் எதிர் கொள்ள வேண்டும் பவுலைப் போல நாம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் பெற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்ற விரும்ப வேண்டும் ஏனென்றால் கிறிஸ்துவின் சுவிசேஷம் பயமுறுத்தலின் மீது வெற்றி அடையக் கூடியதாக இருக்கின்றது.

## III. மரணத்தின் மீது வெற்றி

பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தின் மூலமாக நாம் கற்றுக்கொள்ளும் கடைசி பாடம் மரணத்தின் மீது வெற்றி என்பதாகும்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவை தமது சிலுவையின் மரணத்தின் மூலமாக வென்றார். மரணம் இயேசு கிறிஸ்துவை மேற்கொள்ள முடியவில்லை. அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு சரீரத் தோடு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து தம்மை உயிரோடிருக் கிறவராக காண்பித்தார். அவர் சிலுவையிலே அவரே முன்வந்து தன் ஆவியை பிதாவிடம் ஒப்புக்கொடுத்தது மூலமாக அவர் மரணத்தின்மீது வெற்றி அடைந்தார் (யோவா 19:30; எபி. 2:14). அந்த வெற்றியின் செய்திதான் சுவிசேஷம். கிறிஸ்துவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல் சுவிசேஷம் ஆகும் (1கொரி 15:1-4). அந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக அப்போஸ்தலர் கள் அனைவரும் தங்கள் உயிரையே கொடுத்தனர் இரத்த சாட்சி களாக மரித்தனர். மரண பயம் யாருக்கும் வரவில்லை. சுவிசேஷ மானது மரணத்தின் மீது வெற்றியடைந்திருக்கிறது என்பதைக் காண்பித்தனர்.


பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது அகபு என்ற தீர்க்கத்தரிசியின் மூலமாக மரணத்தைக் குறித்தான எச்சரிப்பை கேள்விப்பட்டு செசரியா பட்டணத்தில் இருந்த விசுவ ாசிகளும், பிரியமான வைத்தியர் லூக்காவும் மிகவும் அழுதார் கள். அதற்கு பவுல் நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப் பண்ணுகிறீர்கள். எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசு வின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல மரிப்பதற் கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றார். (அப். 21:8-13) பவுல் மரணத்தைக் கண்டு பயப்படவில்லை. மரணப்பயமுறுத்தல் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், கிறிஸ்து வின் சுவிசேஷமானது மரணத்தின் மீது வெற்றியடைந்த செய்தி யாகும். எனவே, அவர் மரிப்பதற்கும் ஆயத்தமாயிருந்தார். நாம் எதற்காக ஆயத்தமாயிருக்கிறோம்?. நான் இதை எழுதிக்கொண் டிருக்கும் போது ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி என்பவர் மக்களைச் சந்திப்பதற்காக ஹெலிக் காப்ட்டரில் சென்றபோது (2.9.2009) அவர் விபத்திற்குள்ளாகி மரித்துவிட்டார் என்ற செய்தியை அறிந்தேன். அன்பானவர்களே நாம் சுவிசேஷம் அறிவிக்கச் செல்லும் பொழுது நமக்கு என்ன நேரிட்டாலும் அவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.


நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? இன்னும் அசுத்தாவியை நம்பிக்கொண்டு அதற்காக பணத்தையும், நேரத்தையும் வீணாக செலவழிக்கிறவர்களாக இருக்கின்றோம்! அல்லது சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிந்து எல்லா பயமுறுத்தல்களையும் வென்று முடிவிலே மரண பயத்தையும் வெல்லக் கூடியவர்களாக இருக்கின்றோமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

(தொடரும்) சகோ. பாஸ்கர்

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV திங்கள் காலை 7:00 மணி

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.